පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
**UNIVERSITY OF PERADENIYA**

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொலை மற்றும் தொடர் கல்வி நிலையம்
**CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION**

පළමු වසර ශාස්ත්‍රවේදී උපාධි පරීක්ෂණය (බාහිර - නව නිර්දේශය) දෙසැම්බර් 2018
முதலாம் வருட கலைமானி பரீட்சை (வெயிவாரி – புதிய பாடத்திட்டம்) டிசம்பர்- 2018
1st YEAR (100 LEVEL) EXAMINATION IN BACHELOR OF ARTS
(EXTERNAL - NEW SYLLABUS) DECEMBER 2018

# SUPE 012: திட்ட உருவாக்கமும் மதிப்பீடும்

**Instructions**

(i) The total number of questions in this paper is Seven (07)
(ii) Answer **any Five (05)** questions.
(iii) Time allowed: Three (03) Hours
(iv) Calculators are allowed

---

1. a) பொருத்தமான உதாரணங்களைப் பயன்படுத்தி திட்டம் இனங்காணலுக்கான பிரதான அணுகுமுறைகளை விளக்குக. (07 புள்ளிகள்)

   b) திட்டம் உருவாக்கத்தில் காணப்படும் சாத்தியபாட்டு ஆய்வு வகைகளை குறிப்பிட்டு கலந்துரையாடுக. (05 புள்ளிகள்)

   c) திட்டம் இனங்காணல் கட்டத்தின்போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முன்னிலை விடயங்கள் யாவை? விளக்குக. (05 புள்ளிகள்)

   d) திட்டம் உருவாக்கும் கட்டத்தின்போது திட்டம் இனங்காணலின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக. (03 புள்ளிகள்)

2. பேராதனை நகர பிரதேசத்ல் ஆற்று நீர் மாசடைவது ஒரு தீவிர பிரச்சினையாக மத்திய மாகாண சுகாதார மற்றும் சூழல் அமைச்சு அடையாளம் காணப்பட்டுள்ளது. இந்நிலைமையானது இயற்கை சூழல், குடியிருப்பளர்கள் வர்த்தக சமுதாயம். பொதுமக்கள் மற்றும் ஆற்று நீரை பயன்படுததுவோர் மீது தீவிரமான எதிர்கணிய விளைவுகளை உருவாக்குவதனால், இம்மாசடைதலிருந்து விடுபடும் நோக்கில் செயற்றிட்டம் ஒன்றை வடிவமைக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. இச்செயற்றிட்டத்தித்தை தயாரிப்பதற்கான பொறுப்பு உமக்கு வழங்கப்பட்டிருப்பதாக கருதுக.

   a) இத்திட்டத்திற்கான மாற்று உபாயங்களை குறிப்பிடுவதோடு அவை ஒவ்வொன்றையும் நியயப்படுத்துக. (03 புள்ளிகள்)

   c) இத்திட்டதினது சூழ்நிலை ஆய்வின்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களைப் பட்டியலிடுக. (05 புள்ளிகள்)

   d) பிரதான பிரச்சினைக்கான பிரச்சினை மரம் மற்றும் நோக்க மரம் என்பனவற்றினைப் பெறுவதோடு அவற்றின் கூறுகளை சுட்டிக்காட்டி விளக்குக. (08 புள்ளிகள்)

   e) இத்திட்டத்தினால் தாக்கத்திற்குள்ளாகும் வேறுப்பட்ட வகையிலான பங்குத்தாரர்களை இனங்காண்க (04 புள்ளிகள்)

3\. a) திட்டத்தின் விபரக்கோவை மற்றும் தர்க்கச் சட்டக ஆய்வு என்பனவற்றை வேறுப்படுத்துக. (03 புள்ளிகள்)

b) திட்டம் உருவாக்கத்தில் தர்க்கச் சட்டக ஆய்வின் முக்கியத்துவத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

c) தர்க்கச் சட்டக ஆய்வின் கூறுகளை பட்டயலிடுக. (04 புள்ளிகள்)

d) தர்க்கச் சட்டக தாயத்தின் கட்டமைப்பு மற்றும் கூறுகளை சுருகக்மாக விளக்குக. (04 புள்ளிகள்)

e) பொருத்தமான உதாரணமொன்றை பயன்படுத்தி ஒரு திட்டம்/ செயற்றிட்டத்தின் வெளியீடு மற்றும் வெளிப்பாடு என்பனவற்றை வேறுபடுத்துக. (05 புள்ளிகள்)

4 ஒரு தனியார் நிறுவனம் ஒரு புதிய உற்பத்தி திட்டத்தினை ஐந்து வருட திட்ட ஆயுட்காலத்திற்கு உற்பத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளது. இப்புதிய உற்பத்தியானது இரு செலவுக் கூறுகளான ஆரம்ப முதலீட்டுச் செலவு மற்றும், தொழிற்பாட்டு மற்றும் பராமறிப்புச் செலவு (இது ஊழியச்செலவு உள்ளீட்டுச்செலவு மற்றும் பராமரிப்புச் செலவு என்பனவற்றை உள்ளடக்கும்) என்பனவற்றையும் நிலையான செலவு, மாறும் செலவு மற்றும் 5 வருடங்களுக்கான மதிப்பிடப்பட்ட வருமான பணப்பாய்ச்சல்களினையும் கொண்டிருக்கும். இச்செயற்றிட்டத்தின் பூச்சிய வருடத்திற்கான (t = 0) முதலீட்டுச்செலவு ரூபா. 400,000 (இது கட்டட உருவாக்கம், இயந்திரங்கள் ஊழியப் பயிற்சி போன்றனவற்றிகான செலவுகளை உள்ளடக்கும். திட்டத்தின 1-5 வருடங்களுக்கான தொழிற்படும் வருடாந்தம் ரூபா 40,000 ஆகும். திட்டத்திக் காலத்தின்போது புதிய பண்டத்தின் எதிர்பாக்கப்பட்ட விற்பனை வருமானம் வருடாந்தம் ரூபா 300,000 ஆகும். அனைத்துப் பணப்பாய்ச்சல்களும் வரிக்குப் பிந்திய பெறுமதிகளாகும். திட்த்தின் கழிவு விகிதம் 10% ஆகும்.

a) திட்டத்தின் கழிவீடு செய்யப்பட்ட செலவுகள் மற்றும் நன்மைகளுக்கான பட்டியலை தயாரிக்குக. (07 புள்ளிகள்)

b) மேலே தரப்பட்டுள்ள கழிவீடு செய்யப்பட்ட தகவல்களைப் பயன்படுதுதி தேறிய நிகழ்கால பெறுமதி (NPV) மற்றும் உள்ளார்ந்த விளைவு வீதம் (IRR) என்பனவற்றை கணிப்பிடுவதோடு உமது பெறுபேறுகளை விமர்சிக்குக. (10 புள்ளிகள்)

c) தொழிற்பாட்டுச் செலவு மற்றும் பராமரிப்புச் செலவு என்பன 5%த்தால் அதிகரிக்குமிடத்து மேலே தரப்பட்ட முடிவுகளில் ஏற்படும் மாற்றங்கள் யாவை? (03 புள்ளிகள்)

5 a) செலவுத்தாக்க ஆய்வ என்பதன் மூலம் நீர் கருதுவது யாது? (04 புள்ளிகள்)

b) ஒரு திட்ட மதிப்பீட்டு செயல்முறையில்போது ஒரு முதலீட்டுத் திட்டத்தின் அனைத்து செலவுகளையும் நன்மைகளையும் நாம் ஏன் கழிவீடு செய்கின்றோம் என்பதனை விளக்குக. (05 புள்ளிகள்)

c) தனிக் கொடுப்பனவுக் காரணி (Factor for Single Payment) மற்றும் கழிவீடு செய்யப்பட்ட வருடாந்த கொடுப்பனவுக் காரணி (Discounted Annual Payment Factor) என்பனவற்றை வேறுபடுத்தி விளக்குக. (05 புள்ளிகள்)

d) தேறிய நிகழ்கால பெறுமதி (NPV) மற்றும் கழிவீட்டு வீதம் என்பனவற்றிற்கிடையிலான தொடர்பினை வரைபட ரீதியாக விளக்ககு. (06 புள்ளிகள்)

6 a) சமூக தாக்க ஆய்வு (SIA) மற்றும் சூழல் தாக்க அய்வு (EIA) என்பனவற்றில் காணப்படும் தாக்க ஆய்வு வகைகளை விளக்குக. (07 புள்ளிகள்)

b) நிகழ்கால விலைகளை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தும் வேறுப்பட்ட சந்தையற்ற பொருட்களை எண்மாணப்படுத்தக்கூடிய நுட்பங்களை குறிப்பட்டு விளக்குக. (08 புள்ளிகள்)

c) அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் நிழல்விலைகளை மதிப்பீடும் போது நீர் முகங்கொடுக்கும் பிரச்சிகைளை விளக்குக. (05 புள்ளிகள்)

7 a) முதலீட்டுத் திட்டத்தை மேற்பார்வை செய்வதன் நோக்கங்களை சுருக்கமாக விளக்குக. (05 புள்ளிகள்)

b) சமூக-பொருளாதார திட்டங்களை மேற்பார்வை செய்வதற்கு பயன்படுத்தக்கூடிய கருவிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

c) ஒரு திட்டத் தாக்க மதிப்பீட்டினது ஆராய்ச்சி செல்முறைகளின் பல்வேறுப்பட்ட படிமுறைகளை விபரிக்குக. (06 புள்ளிகள்)

d) எந்தவொரு வகையான அபிவிருத்தி திட்டமாகினும் ஒரு தாக்க மதிப்பீட்டினை மேற்கொள்ள வேணடியது ஏன் முக்கியானது என்பதனை விளக்குக. (04 புள்ளிகள்)